| | | | |
|---|---|---|---|
| அசல் வழக்கு எண்.126/2019 | | பி.சா.1 | தேதி.01.03.2023 |
| பெயர் | திருமதி. சங்கீதா | வயது | 34 |
| த/பெ. | திரு. ரகுநாத் | முகவரி | 2/66, 5 சி, சின்னதொட்டிபாளையம், காரமடை |
| வட்டம் | மேட்டுப்பாளையம் | மாவட்டம் | கோயமுத்தூர் |

சாட்சி முன்னிலை உறுதிமொழி எடுக்கப்பட்டது

<u>குறுக்கு விசாரணை</u>

1. நான் கட்டியுள்ள வீட்டின் கதவு எண்.2/665 சி என்றால் சரிதான். வீட்டை 2018 ல் கட்ட ஆரம்பித்தேன் என்றால் சரிதான். நான் அந்த வீட்டிற்கு வாங்கிய மின் இணைப்பு விவரங்கள் இவைதான். அது வா.சா.ஆ.5. 20.02.2018 ல் வீடு கட்டுவதற்காக மின்சார வாரியத்தில் விண்ணப்பம் செய்து மின் இணைப்பு பெற்றுள்ளேன் என்றால் சரிதான். அந்த சமயத்தில் வீடு என் அம்மா ராஜேஸ்வரி பெயரில் இருந்தது என்றால் சரிதான். வீடு கட்ட ஆரம்பித்த பிறகுதான் அந்த இடத்தை என் அம்மா தான செட்டில்மெண்ட் மூலம் கொடுத்தார் என்றால் சரிதான். இந்த வீடு கட்டுவதற்காக பேங்கில் நான் எந்த கடனும் பெறவில்லை என்றால் சரிதான். வீடு கட்டும்போது என் கையில் எந்த பணமும் இல்லை என்றால் சரிதான், முத்து பைனான்சில் சீட்டு போட்டு பணம் எடுத்து வைத்திருந்தேன். சீட்டு 8 லட்சத்திற்கு போட்டேன். இன்னொரு இடத்தில் 4 லட்ச ரூபாய்க்கு சீட்டு போட்டேன்.

2. சீட்டு போட்டு பணம் வைத்திருந்தேன் என்பதை காண்பிக்க எந்த ஆவணங்களையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 20.02.2018 அன்று வீடு கட்டுவதற்காக வாதியிடம் ரூ.7,50,000/- யை கடனாக பெற்று அதன்பிறகுதான் வீடு கட்டவே ஆரம்பித்தேன் என்றால் சரியல்ல. பிரபாகரன்தான் எனக்கு வீடு கட்டி கொடுத்தார் என்றால் சரிதான். அந்த வீடு 1800 சதுரடி கொண்டதாகும். அந்த வீட்டின் மதிப்பு அப்போது ரூ.30 லட்சம் செலவானது என்றால் வீட்டை கட்டி முடிக்கும்போது ரூ.17 லட்சம் செலவானது. பிரபாகரன் தான் வீடு கட்ட பொருள்களை வாங்கி போட்டு செலவு செய்து வீட்டை முடித்து கொடுத்தார் என்றால் சரியல்ல. வீடு கட்ட ஒப்பந்தம் போட்டபோது வாதியிடம் வாங்கிய ரூ.7,50,000/- யை பிரபாகரனிடம் கொடுத்து வீடு கட்ட சொன்னேன் என்றால் சரியல்ல. அதன் பிறகு கொஞ்சம் கொஞ்சமாக நான் தொகை கொடுத்தது போக பிரபாகரன் ரூ.13 லட்சம் போட்டு இந்த வீட்டை கட்டி கொடுத்தார் என்றால் சரியல்ல.

3. வீடு கட்டுவதற்காக எழுத்து மூலமாக ஒப்பந்தம் எதுவும் போடவில்லை. நம்பிக்கையின் பெயரில் அவர் கையிலிருந்த பணத்தை போட்டு வீட்டை கட்டி கொடுத்தார் என்றால் சரியல்ல. வீட்டு வேலை முடிந்தவுடன் வங்கியில் பத்திரத்தை வைத்து கடன் வாங்கி தருவதாக சொல்லி வீட்டு வேலையை முடித்து கொடுக்க சொன்னேன் என்றால் சரியல்ல. நான் அருண் என்பவரை திருமணம் செய்து கொண்டு அதன் பிறகு ரகுநாத் என்பவரை திருமணம் செய்துகொண்டேன் என்றால் சரியல்ல. துரைசாமி என்பவரை நான் பிறகு திருமணம் செய்து கொண்டேன் என்றும், அவரை சேர்ந்து வாழ வரசொல்லி இதே நீதிமன்றத்தில் வழக்கு போட்டேன் என்றும் சொன்னால் சரிதான். ரகுநாத் என்பவரை திருமணம் செய்தததை மறைத்து துரைசாமி என்பவரை திருமணம் செய்தேன் என்றால் சரியல்ல.

4. ரகுநாத்தை கல்யாணம் செய்தபிறகுதான் இந்த கட்டிடத்தையே கட்ட ஆரம்பித்தேன் என்றால் சரிதான். அந்த சமயத்தில் எனக்கு தனிப்பட்ட வருமானம் கிடையாது என்றால் சரியல்ல, ரோடு ஓரத்தில் டிபன் கடை போட்டு நடத்தி வந்தேன். வீடு கட்டி முடிந்த பிறகு ரூ.13 லட்சத்தை நான் தரவேண்டும் என்று சொல்லி பிரபாகரன் எனக்கு வழக்கறிவிப்பு ஒன்று அனுப்பினார் என்றால் சரிதான். அவர் அளித்த அறிவிப்பில் அவருக்கு கொடுக்கவேண்டிய பணத்தை ஏமாற்ற வேண்டும் என்பதற்காக நான் அவருடன் தவறாக நடக்க முயற்சி செய்தததாக உரைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த பதிலுரையில் வீடு கட்டுவது சம்பந்தமாக எனக்கும் ,பிரபாகரனுக்கும் பிரச்சினை என சொல்லவில்லை என்றால் சரியல்ல. வீடு கட்ட பிரபாகரனிடம் கடன் பெற்று தான் வீடு கட்டினேன் என்றும், ஆரம்பத்தில் இருந்து மற்றவர்களை ஏமாற்றுவது என் வழக்கம் என்றும், அதே வகையில் வீடு கட்டி முடித்த பிறகு பிரபாகரனையும் ஏமாற்றிவிட்டேன் என்றும் சொன்னால் சரியல்ல.

5. வாய்மொழியாக ஒப்பந்தம் போட்டு நம்பிக்கையின் பேரில் பணம் போட்டு வீடு கட்டி கொடுத்தால் நான் பணம் கொடுக்காமல் ஏமாற்றிய பிறகும் ஆவணங்கள் எதுவும் இல்லாததால் பிரபாகரன் என் மீது எந்த வழக்கையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டில் உள்ள கையொப்பத்தை ஒப்பிட்டு பார்க்க மனுதாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் கையொபத்தை ஒப்பிட்டு பார்க்க அனுப்பப்பட்டும் மற்ற ஆவணங்கள் இல்லாததால் ஒப்பீட்டு கருத்துரை சொல்ல முடியவில்லையென கையெழுத்து நிபுணர்கள் சொல்லிவிட்டார்கள் என்றால் சரிதான்.

சரியான ஆவணங்களை அனுப்பினால் உண்மை தெரிந்துவிடும் என்பதால்தான் சரியாக ஆவணங்களை அனுப்பாமல் தவிர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னிடம் இருந்த எல்லா ஆவணங்களையும் கொடுத்துவிட்டேன். நான் சொல்வது போல் எந்த ஆவணங்களையும் நான் கொடுக்கவில்லை என்றும், உண்மையான என்னுடைய கையெழுத்துகள் உள்ள ஆவணங்களை நான் கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டை அதில் உரைக்கப்பட்ட தேதியில் எழுதிக்கொடுத்து வாதியிடம் ரூ.7,50,000/- யை கடனாக பெற்றுக்கொண்டு அவருக்கு திருப்பித்தராமல் இருப்பதற்காக ஒரு பொய்யான பதிலுரை தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதியின் வழக்கு அனுமதிக்கத்தக்கது என்றால் சரியல்ல.

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

**Sd/- P.K.Sivakumar**

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.